**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| | | |
|---|---|---|
| தரம் :- 13(2019) | நாடகமும் அரங்கியலும் I | மூன்று மணித்தியாலம் |

### பகுதி I

❖ **இப்பகுதியில் *1* தொடக்கம் *40* வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

01. பின்வருவனவற்றில் 'மனவெளியில் கண்டு' கற்பனை செய்து இரசிக்கும் கலை வடிவம்.
1) நடனம் 2) இலக்கியம் 3) இசை
4) நாடகம் 5) சினிமா ( )

02. வானொலி நாடகத்திற்கும், தொலைக்காட்சி நாடகத்திற்கும் பொருந்தாத கூற்று.
1) தொழில் நுட்ப கலைகள் 2) சேமித்து வைக்க கூடியவை
3) உடனடி எதிர்வினைக்குட்படுபவை 4) கதை சொல்லும் வடிவங்கள்
5) உரையாடல்களைப் பயன்படுத்துபவை. ( )

03. "ருக்மணி அருண்டேல்" தொடர்புபடுகின்ற கலைவடிவம்.
1) நடனம் 2) இசை 3) நாடகம் 4) ஓவியம் 5) இலக்கியம் ( )

04. 'அரங்கு' என்பதற்குப் பொருத்தமற்ற கூற்று.
1) ஆற்றுகை நிகழும் இடம் 2) ஆற்றுகைக்குரிய செயற்தொகுதி
3) உறைநிலைக் கட்டடம் 4) ஆற்றுவோர், பார்ப்போர் இணையும் இடம்
5) பார்த்தலுக்குரிய வெளி. ( )

aigaram.lk

05. "அழகை கண்டு பிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதுமே கலை" எனக் கூறியவர்.
1) தாகூர் 2) அரவிந்தர் 3) மாசேதுங்
4) அரிஸ்ரோட்டில் 5) எரிக் நியூட்டன் ( )

06. நடனக் கலையின் இன்றியமையாத துணைக்கலை என அழைக்கப்படுவது.
1) வேட உடை 2) அரங்க வெளி 3) ஒப்பனை
4) இசை 5) அணிகலன்கள் ( )

07. நாட்டிய சாஸ்திரம் கூறுகின்ற அரங்கில், நடிகர்கள் ஆற்றுகைக்கு தயாராக நிற்கின்ற இடம்.
1) ரங்க பீடம் 2) ரங்க சீர்யம் 3) நேபத்ய கிரகம்
4) அம்பலம் 5) திரியஸ்ரா ( )

08. நாடகத்தின் முதன்மையான அம்சம் என அரிஸ்ரோட்டில் கூறுவது.
1) பெருங்காட்சி 2) சிந்தனை 3) சொல்லாடல்
4) பாத்திரம் 5) நாடகச் செயல் ( )

09. வடமொழி நாடகக் கட்டமைப்பில் "எதிர்ப்படும் துன்பத்தினை நீக்குவதால் குறிக்கோள் நிறைவேறும்" என்ற நம்பிக்கையை பிறப்பித்தலுடன் தொடர்புபடுகின்ற பகுதி.
1) பலாகமம் 2) ஆரம்ப 3) பிரப்தியாச
4) நியதாப்தி 5) பிரயத்தன்மை ( )

10. 'தெஸ்பிசின் வண்டி' என்ற கலைச்சொல் குறிப்பது.
1) அரங்க வரலாற்றின் தொடர்ச்சி 2) தெஸ்பிசின் வரலாறு
3) அவல நாடக வரலாறு 4) கிரேக்கத்தில் நாடகம் நிகழ்ந்த முறை
5) தொல்பொருள் ஆய்வுகள். ( )

11. கிரேக்க அரங்கில் நேரடியாக மேடையில் காட்டமுடியாத சம்பவங்களை, மேடையில் வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபாயம்.
1) கோரஸ் 2) ஊமம் 3) செய்தியாளன்
4) காட்சித்திரைகள் 5) பாடல்கள் ( )

12. "புறோசீனியம்" என்னும் வில்வளைவு அரங்கு (Pro – seenium Arch Theatre) தோற்றம் பெற்ற காலம்.
1) எலிசபெத் காலம் 2) மத்திய காலம் 3) மறுமலர்ச்சிக் காலம்
4) கிரேக்க காலம் 5) உரோமைய காலம் ( )

13. கீழைத்தேய 'நடிப்பு' முறைகளில் முதன்மை பெறுவது
1) வார்த்தைகள் 2) உடல் மொழி 3) வேடமுகம்
4) சைகைகள் 5) ஆடை, அணிகள் ( )

14. கிரேக்கத்தின் 'டித்ராம்' பாடல்களை இலக்கிய நிலைப்படுத்தியவர்.
1) தெஸ்பிஸ் 2) ஏஸ்கலஸ் 3) அரிஸ்ரோட்டில்
4) ஆரியோன் 5) பிளேற்றோ ( )

15. வடமொழி நாடகங்களில் சூத்திர தாரனும் - நடியும் தோன்றி நாடகத்தினை அறிமுகம் செய்கின்ற பகுதி.
1) சாந்தி 2) கீதவிதி 3) ரங்கத்வாரம் 4) சாரியை 5) சுதாபன ( )

16. பின்வருவனவற்றில் "நாட்டிய தர்மி" பற்றிய சரியான கூற்று.
1) லலித அங்க அசைவுகள் அற்றது.
2) பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் கொண்டது.
3) இயல்பான அபிநயங்களைக் கொண்டது.
4) பாத்திர அபிநயங்கள், அசைவுகளை குறியீடுகளால் சித்தரிப்பது.
5) ஒரு பாத்திரத்தை ஒரு நடிகரே நடிப்பது. ( )

agaram.lk

17. "ஊமச்" சித்தரிப்புடன் தொடர்புபடாத அபிநயம்.
1) ஆங்கீகம் 2) ஆஹார்யம் 3) வார்ஷீகம் 4) சாத்வீகம் 5) அர்த்தபதாகம் ( )

18. "நாடக வழக்கு' 'உலக வழக்கு' என ஆற்றுகைப் பாணிகளை குறிப்பிட்ட தமிழ் இலக்கண நூல்.
1) தசரூபகம் 2) தொல்காப்பியம் 3) பரிபாடல்
4) சிலப்பதிகாரம் 5) கவிதை இயல் ( )

19. இந்தியாவில் "கூத்தம்பலம்" அரங்கில் நிகழும் மரபுவழி ஆற்றுகை.
1) கூடியாட்டம் 2) யாத்ரா 3) தெருக்கூத்து
4) பாகவத மேளம் 5) மணிப்புரி ( )

20. இயற்பண்புவாத நாடக மரபின் தொடக்கமாக கொள்ளப்படும் 'எமிலி ஜோலா' எந்த நாட்டினைச் சேர்ந்தவர்.
1) அமெரிக்கா 2) ஜேர்மனி 3) போலந்து
4) பிரான்ஸ் 5) ரஷ்யா ( )

21. ஒரு சமூகத்தில் 'சடங்குகள்' தொடர்ந்து நிகழ்த்தப்படுவதற்கான அடிப்படைக் காரணம்.
1) நம்பிக்கை 2) ஐதீகம் 3) பாரம்பரியம்
4) இரசனை 5) கடமைப்பாடு ( )

22. தொல்காப்பியம் கூறுகின்ற ஆற்றுகை மையமாக இருப்பது.
1) ஆடுகளம் 2) கூத்தம்பலம் 3) பண்ணை
4) எருமன்று 5) கூத்தாட்டவை ( )

23. 'ஸ்வப்ன வாசவதத்த' என்ற வடமொழி நாடகத்தினை எழுதியவர்.
1) பாசர் 2) காளிதாசர் 3) சூத்ரகர் 4) ஸ்ரீ ஹர்சர் 5) மகேந்திர பல்லவன் ( )

24. 'அபிக்ஞான சாகுந்தலம்' நாடகத்தில் விஞ்சி நிற்கின்ற பிரதான ரஸம்.
1) சோகம் 2) ரௌத்திரம் 3) அச்சம் 4) அற்புதம் 5) சிருங்காரம் ( )

25. ஜப்பானில் நாடகத்தோற்றத்திற்கு காரணமாய் அமைந்த சடங்கு.
1) டயோனீசியஸ் சடங்கு 2) ஈஸ்டர் சடங்கு 3) சம்போஷா சடங்கு
4) புன்றக் சடங்கு 5) வெறியாட்டு சடங்கு ( )

26. தமிழ் நாட்டில் சோழர் காலத்தில் 'திருவளவன்' என்னும் பெயரில் அழைக்கப்பட்ட கலைஞன்.
1) தண்ணுமை ஆசிரியன் 2) கவிஞன் 3) ஆடல் கலைஞன்
4) இசை ஆசிரியன் 5) முரசறைவோன் ( )

27. நாடகம் என்பது 'கதை தழுவி வரும் கூத்து' என்று கூறியவர்.
1) கா. சிவத்தம்பி 2) அடியார்க்கு நல்லார் 3) தொல்காப்பியர்
4) சு. வித்தியானந்தன் 5) பரிமேலழகர் ( )

28. 'கொட்டகை நாடக மரபு' என அழைக்கப் பெற்றது.
1) கூத்து 2) விலாசம் 3) தெருக்கூத்து
4) இசை நாடகம் 5) சபா நாடகம். ( )

29. தமிழில் கிறிஸ்தவ மதத்தின் வருகையால் உருவாகிய நாடக மரபு.
1) விலாச நாடகம் 2) தெருக்கூத்து 3) ஸ்பெஷல் நாடகம்
4) வாசக்கப்பா 5) கீர்த்தனை நாடகம் ( )

30. காத்தவராஜன் கூத்து, காமன் கூத்து, கோவலன் கூத்து ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படும் பிரதான இசைக்கருவிகள் முறையே.
1) மத்தளம், பறை, உடுக்கு 2) உடுக்கு, மிருதங்கம், மத்தளம் 3) பறை, தப்பு, மத்தளம்
4) தப்பு, உடுக்கு, மத்தளம் 5) உடுக்கு, தப்பு, மத்தளம் ( )

agaram.lk

31. "காவி உடுத்தல்லவோ ஆதிசிவனாரும். ஒரு காரணமாய் வேடங் கொண்டார் மாயசிவனாரும்" என்ற காத்தவராயன் கூத்துப் பாடல் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் மிகவும் பொருத்தமான கூத்து.
1) சிவன் பாத்திரம் தனது வருகையை 'தன்மையில்' பாடுகிறது.
2) சிவனின் வருகையை சபையோர் 'படர்க்கையில்' பாடுகின்றனர்.
3) சிவன் பாத்திரம் தனது வருகையை 'படர்க்கையில்' பாடுகின்றது.
4) ஆதிசிவனாரைப் பற்றி மாய சிவனார் பாடுகின்றார்.
5) கட்டிய காரன் சிவன் பாத்திரத்தை அறிமுகம் செய்கின்றார். ( )

32. 'நடிகமணி வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்' என்ற நூலை எழுதியவர்.
1) காரை. செ. சுந்தரம்பிள்ளை 2) சி. மௌனகுரு 3) வி.வி. வைரமுத்து
4) குழந்தை ம. சண்முகலிங்கம் 5) சு. வித்தியானந்தன் ( )

33. மஹாகவியின் 'கோடை' நாடகத்தினை முதன்முதலாக நெறியாள்கை செய்தவர்.
1) நா. சுந்தரலிங்கம் 2) சி.மௌனகுரு 3) க. பாலேந்திரா
4) அ. தாசீசியஸ் 5) இளைய பத்மநாதன் ( )

34. சோபோகிளிஸ், இடிப்பஸ் மன்னன் நாடகத்தினை எழுதிய காலத்தில் அதில் நடித்த நடிகர்கள் தொகை.
1) 08 2) 05 3) 06 4) 03 5) 02 ( )

35. 'இராவணேசன்' கூத்தினை 1960 களில் முதன் முதலாக உருவாக்கியவர்.
   1) சி. மௌனகுரு
   2) செல்லையா அண்ணாவியார்
   3) பேரா சு. வித்தியானந்தன்
   4) பேரா. கா. சிவத்தம்பி
   5) பேரா. க. கணபதிப்பிள்ளை ( )


36. "கோடை" நாடகத்தில் மையப்படுத்தப்பட்டிருக்கும் கலை வடிவம்.
   1) நடனம்
   2) இசை
   3) நாதஸ்வர இசைக்கலை
   4) இசைக்கச்சேரி
   5) வில்லிசை ( )

37. அருகிலுள்ள படத்தில் காணப்படும் அரங்க வெளி.
   1) குளோப் அரங்கு
   2) உரோமைய அரங்கு
   3) கிரேக்க அரங்கு
   4) நோ அரங்கு
   5) மத்திய கால அரங்கு



( )

38. படத்தில் காட்டப்பட்டுள்ள ஐரோப்பிய நாடவியலாளர்.
   1) ஸ்ரனிஸ்லவஸ்கி
   2) ஹென்றிக் இப்சன்
   3) பெத்தோல்ட் பிரக்ட்
   4) ஷேக்ஸ் பியர்
   5) அன்ரன் செக்கோவ்



( )

39. படத்தில் காட்டப்படுள்ள ஈழத்தின் "பா" நாடக ஆசிரியர்.
   1) முருகையன்
   2) மஹாகவி
   3) அம்பி
   4) நீல வாணன்
   5) சொக்கன்



( )

40. படத்தில் காட்டப்பட்டுள்ள காட்சி இடம் பெறும் நாடகம்.
   1) உறவுகள்
   2) புதியதொரு வீடு
   3) கோடை
   4) சங்காரம்
   5) வெறியாட்டு



( )

(1 X 40 = 40 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

❖ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து, நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

## பகுதி A

*01.*

1) ‘கலை’ என்பதனை விளக்குக? (3 புள்ளிகள்)

2) கலைக்கும் கைவினைக்கும் இடையிலான வேறுபாடுகளை எழுதுக. (6 புள்ளிகள்)

3) நாடகக் கலையை, இலக்கியம், இசை ஆகிய கலைகயில் இருந்து வேறுபடுத்துக? (6 புள்ளிகள்

*02.* 1) ‘நடிப்பு’ பற்றிய பிரதான சிந்தனைகளை தருக? (5 புள்ளிகள்)

2) உமக்குத் தெரிந்த ஈழத்து நடிகர் ஒருவர் பற்றி அல்லது ஸ்ரனிஸ்லவஸ்கி முன்வைத்த நடிப்பு பற்றிய சிந்தனைகள் பற்றி சுருக்கமாக விளக்குக? (5 புள்ளிகள்)

3) வினா II இல் நீர் தெரிவு செய்த நடிகர், அல்லது அரங்கியலாளரின் சிந்தனை பற்றிய உமது அபிப்பிராயங்களை முன்வைக்குக. (5 புள்ளிகள்)

*03.* அ) குளோப் அரங்கு ஆ) படச்சட்ட அரங்கு

இ) தெருவெளி அரங்கு

மேலே தரப்பட்ட அரங்கவெளிகள் ஒவ்வொன்றிலும் காணப்படக்கூடிய

1) வெளியின் இயல்பு

2) அளிக்கை முறைமை

3) ஆற்றுவோர் பார்ப்போர் உறவு

என்பவை வேறுபடுமாற்றை விபரிக்குக. (3x5 = 15 புள்ளிகள்)

agaram.lk

## பிரிவு B

*04.* 1) அரங்கில் “பார்ப்போரின்” பங்களிப்பினை விபரிக்குக?

2) நாட்டிய சாஸ்திரம் கூறும் ‘ரஸம்’ பற்றி விளக்குக?

3) ரஜடி நாடகத்தின் மூலம் வெளிப்படும் ‘கதாசிஸ்’ உணர்வு வெளிக்கொணர்கை பற்றி விளக்கம் தருக?

*05.* ‘சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்தே வந்தனவாக தொகுத்துக் கூறுதல் நாடகம்’ என்ற கூற்றுக்கமைய நாடகக் கலையில் ‘பலவற்றின் ஒன்றிணைவு’ பற்றி விபரிக்குக.

*06.* கீழே தரப்படுபவைகளில் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) நாடக மும்மை 2) யதார்த்த வாதம் 3) ரட்டயக்கும

4) ஒப்பேரா 5) தொலைக்காட்சி நாடகம்

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

FWC

| தரம் :- 13(2019) | நாடகமும் அரங்கியலும் II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ *1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.*

01. கலையிலிருந்து கைவினை வேறுபடுவதற்கான அடிப்படையான வேறுபாடு?
   1) மனித திறனின் வெளிப்பாடு
   2) அழகுடன் காணப்படுதல்
   3) மீள்படைப்பு செய்யப்பட முடியாமை
   4) பிறிதொரு பொருளை மூலகமாக பயன்படுத்துதல்
   5) கற்பனையுடன் கூடியது ( )

02. பின்வருவனவற்றில் "ஆக்கும் கலை" என்ற வரையறைக்குட்படாதது?
   1) ஓவியம் 2) சிற்பம் 3) இலக்கியம் 4) இசை 5) கட்டடம் ( )

03. நாடக ஆக்கக் கூறுகளில் இலக்கியத்துடன் தொடர்புபடுவது?
   1) நாடக பாடம் 2) நடிப்பு 3) காட்சி விதானிப்பு
   4) பாடல்கள் 5) இசை ( )

04. பின்வருவோரில் ஐரோப்பிய யதார்த்தவாத நாடகங்களுடன் தொடர்பு படாதவர்?
   1) எமிலி ஜோலா 2) அலெக்ஸ்சாண்டர் டுமாஸ்
   3) இப்ஸன் 4) பேனாட்ஷோ
   5) அன்ரன் செகோவ் ( )

05. மகாபாரதத்தினை ஒன்பது மணிநேர நாடகமாக தயாரித்த அமெரிக்க நெறியாளர்?
   1) அரியானி 2) பீற்றர் புறூக் 3) றிச்சாட் செக்னர்
   4) பிரக்ட் 5) மேயர் ஹோல்ட் ( )

06. ஷேக்ஸ்பியரின் Blank Verse என்றும் கவிதையாப்பு முறைக்கு எலிசபெத் காலத்தில் இருந்த முன்னோடி?
   1) கிறிஸ்தோப்பர் மார்லோ 2) பென்ஜோன்ஸன் 3) றொபேட் கிஜீன்
   4) ஜேண்லிலி 5) அலெக்சாண்டர் டுமாக்ஸ் ( )

07. பார்ப்போர் செயல் முனைப்புள்ள பார்ப்போராக இருக்க வேண்டும் என கருதிய நெறியாளர்?
   1) அகஸ்தோ போவால் 2) ஸ்ரனிஸ்லவஸ்கி 3) அன்ரோ அன்றோயின்
   4) அன்ரன் செகோவ் 5) ஹென்றிக் இப்ஸன் ( )

08. உலகப் புகழ் பெற்ற "அபத்தவாத" நாடகமாகக் கொள்ளப்படுவது?
   1) அபசுரம் 2) 30 செக்கனில் மூச்சு
   3) கொடோவுக்காக காத்திருத்தல் 4) பச்சோந்தி
   5) வெண்கட்டி வட்டம் ( )

09. இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் வருகின்ற தெய்ரீரியஸ் என்ற பாத்திரம்?
   1) இடிப்பசின் தந்தை 2) செய்தியாளன் 3) காவலாளி
   4) தீர்க்கதரிசி 5) ஜொகஸ்ராவின் சகோதரன் ( )

agaram.lk

10. பின்வரும் கிரேக்க நாடகங்களில் இடிபஸ் கதைப் புராணத்துடன் தொடர்புபடாத கதையைக் கொண்ட நாடகம்?
1) அன்ரிக்கனி 2) தீபிசுக்கு எதிரான எழுவர் 3) இடிப்பஸ் மன்னன்
4) கொலனசில் இடிப்பஸ் 5) ரோஜன் பெண்கள் ( )

11. ஹென்றிக் இப்ஸன் தனது நாடகங்களில் குறியீடாக பயன்படுத்திய மூலகங்கள்?
1) காட்சி விதானிப்புஒளி 2) வார்த்தைகள் - மேடைப்பொருட்கள்
3) காட்சித்திரைகள் - இசை 4) வார்த்தைகள் - வேடஉடைகள்
5) படிமங்கள் - ஒளி ( )

12. கீழைத்தேசத்து அரங்கியல் உத்திகளை தமது நவீன நாடகங்களில் பயன்படுத்திய ஐரோப்பிய நெறியாளர்கள்?
1) ஸ்ரனிஸ்லவஸ்கி – ஷேக்ஸ்பியர்
2) அகஸ்தோபோவால் - அன்ரோஅன்ரோயின்
3) இப்ஸன் - மெனிங்சன் பிரபு
4) பிரக்ட் - பீற்றர் புறுக்
5) மேயஹோல்ட் - சாமுவேல் பெக்கட் ( )

13. அரங்க வரலாற்றில் "ஆற்றுகைக் கற்கைகள்" என்ற கற்கை நெறிமுறையை பிரக்ஞை பூர்வமாக உருவாக்கியவர்?
1) குறொட்டோவ்ஸ்கி 2) பீற்றர் புறுக் 3) ஆர்த்தோ
4) ஜோர்ஜ் தொம்சன் 5) றிச்சாட் செக்னர் ( )

14. மத்திய காலத்தில் நாடகங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான பொருளாதாரத்தினை வழங்கியவர்கள்?
1) கில்டுகள் 2) கொரிக்கஸ் 3) கத்தோலிக்க திருச்சபை
4) நாட்டுக்கோட்டை செட்டிமார் 5) வணிகர்கள் ( )

15. ஷேக்ஸ்பியர் எழுதிய பின்வரும் நாடகங்களில் "அரசியல்" நாடகம் என்று கூறக்கூடியது?
1) லியர் மன்னன் 2) யூலிய சீசர் 3) ஒத்தெல்லோ
4) புயல் 5) நடுக்கோடை இரவுக்கனவு ( )

16. காளிதாசரின் "சாகுந்தலம்" நாடகத்தின் மூலக்கதை எடுக்கப்பட்டது?
1) மகாபாரதம் 2) சிவபுராணம் 3) இராமாயணம்
4) மேகதூதம் 5) கந்தபுராணம் ( )

17. வடமொழி நாடகங்களின் தாக்கங்களினடியாக பல்லவ காலத்தில் எழுதப்பட்ட நாடகம்?
1) பூம்புலியூர் நாடகம் 2) நொண்டி நாடகம் 3) பள்ளு நாடகம்
4) மத்தவிலாசப் பிரகசனம் 5) இராஜ ராஜேஸ்வரன் நாடகம் ( )

18. நாடகம் என்ற சொல் முதன்முதலில் இடம்பெற்ற பண்டைத் தமிழ் இலக்கியம்?
1) தொல்காப்பியம் 2) திருக்குறள் 3) புறநானூறு
4) கலித்தொகை 5) பட்டினப்பாலை ( )

19. சாகுந்தலம் நாடகத்தில் துஷ்யந்தனின் ஆட்சிக்குரிய நாடு?
1) அயோத்தி 2) அத்தினாபுரம் 3) கலிங்கம்
4) புட்டபத்தி 5) மதுரை ( )

20. "நேற்று எங்களைவிட்டுப்பிரிந்து வேட்டை ஆடுகையில் ஆச்சிரமத்தில் பிரவேசித்த அரசன் கண்ணில் சகுந்தலை என்ற தாபசக்கன்னி எனது துரதிஷ்டத்தினால் தென்பட்டு விட்டாள்" சாகுந்தலம் நாடகத்தில் வருகின்ற மேற்படி உரையாடலுக்குரிய கதாபாத்திரம்?
1) கரபகன் 2) கஞ்சுகி 3) பிரியம்வதை
4) அனசூயை 5) விதூஷகன் ( )

21. பின்வரும் கூற்றுக்களில் இராவணேசன் நாடகம் பற்றிய பொருத்தமற்ற கூற்று?
1) இது இராமாயனத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.
2) இங்கு "இராவணன்" தன்மானமுள்ள தலைவனாக சித்திரிக்கப்படுகின்றான்
3) இது "இராம நாடகம்" என்ற வடமோடிக் கூத்தின் சுருங்கிய வடிவம்
4) இதனை "கூத்தைப்பயன்படுத்திய" மோடி நாடகம் எனலாம்
5) இதன் எழுத்துருவாக்கத்தில் பேராசிரியர் வித்தியானந்தன், போ.சிவத்தம்பி என்போரின் ஆலோசனைகள் அடிப்படையாக இருந்துள்ளன. ( )

agaram.lk

❖ **இராவணேசன் நாடகத்தில் வரும் பின்வரும் பாடல் வரியை அடிப்படையாகக் கொண்டு 22,23, 24 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

"அப்பனைக் கொன்றவனோடு எப்படி நீ கூடினாயோ தம்பி அட தம்பி
நானவனைக் கொல்லுகிறேன் நீ எனக்கு துணை வாடா தம்பி அட தம்பி"

22. மேற்படி பாடலை பாடும் பாத்திரம்?
1) இராமன் 2) அனுமன் 3) விபீடனன் 4) இராவணன் 5) அங்கதன் ( )

23. "அப்பன்" என குறிப்பிடப்படும் பாத்திரம்?
1) தசரதன் 2) மாலியவான் 3) வாலி 4) இராமன் 5) சுக்கிரீவன் ( )

24. "தம்பி" என விளிக்கப்படும் பாத்திரம்?
1) இலட்சுமணன் 2) இந்திரஜித் 3) விபீடணன்
4) கும்பகர்ணன் 5) அங்கதன் ( )

25. ஈழத்தில் நாடகத்துறையின் கௌரவங்கருதி கல்வி கற்ற மத்தியதரவர்க்கத்து உத்தியோகத்தர்களை தனது நாடக சபையின் அங்கத்தவர்களாகக் கொண்டு நாடகங்களை மேடையேற்றியவர்?
1) பேரா. க. கணபதிப்பிள்ளை 2) நடிகமணி வி.வி வைரமுத்து 3) பூந்தான் யோசேப்பு
4) தாசீசியஸ் 5) கலையரசு சொர்ணலிங்கம் ( )

26. யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட முதல் தெருவெளி நாடகம் எனக்கருதப்படுவது?
1) மாயமான் 2) கசிப்பு 3) களத்தில் காத்தான்
4) திருவிழா 5) விடுதலைக்காளி ( )

27. கிறிஸ்தவ கூத்துக்களில் வருகின்ற "புலசத்தோர்" என்னும் பாத்திரம்?
1) கதை சொல்லும் பாத்திரம் 2) பிற்பாட்டுப் பாடும் பாத்திரம்
3) நாடகத்தில் வரும் புனிதர் பாத்திரம் 4) புலவர் பாத்திரம்
5) நகைச்சுவைப் பாத்திரம் ( )

28. அம்பலத்தடிகளின் 'கந்தன் கருணை' நாடகம் வெளிப்படுத்துவது?
1) முருகன் திருவருளை 2) சாதிய ஒடுக்குமுறையை
3) முதலாளி, தொழிலாளி பிரச்சினையை 4) வேலையில்லாப் பிரச்சினையை
5) தமிழர் வரலாற்றினை ( )

agaram.lk

29. 'இலங்கை பல்கலைக்கழக நாடக அரங்கு' என்னும் ஆய்வு நூலை எழுதியவர்?
1) சி.மௌனகுரு 2) காரை.செ. சுந்தரம்பிள்ளை 3) இ. சிவானந்தன்
4) கா. சிவத்தம்பி 5) நா. சுந்தரலிங்கம் ( )

30. மன்னார் பிரதேச கூத்து மரபுடன் தொடர்பைக் கொண்டிருக்க கூடிய சிங்கள நாடக வடிவம்?
1) கோலம் 2) சொக்கரி 3) நாடகம
4) நூர்த்தி 5) கவி ( )

31. ஈழத்தில் 'கோவலன் கூத்து' என்னும் கூத்து வகை ஆடப்படும் பிரதேசம்?
1) மட்டக்களப்பு 2) வன்னி 3) யாழ்ப்பாணம்
4) மலையகம் 5) திருகோணமலை ( )

32. பிரயோக அரங்கமுறையை ஈழத்தில் முதன் முதலாக பயன்படுத்திய நெறியாளர்?
1) குழந்தை. ம. சண்முகலிங்கம் 2) பேரா. எதிரிவீர சரச்சந்திர 3) நா. சுந்தரலிங்கம்
4) க.சிதம்பரநாதன் 5) நீ. மரியசேவியர் அடிகள் ( )

33. ஒரு நாடக உருவாக்கத்தில் 'எடுத்துச் சொல்லி' என்னும் நினைவூட்டுபவரின் பணி ஆரம்பிப்பது?
1) வாசிப்பு ஒத்திகையில் 2) மனன ஒத்திகையில் 3) செயல் ஒத்திகையில்
4) மேடையேற்ற நேரத்தில் 5) நடிகர் தெரிவில் ( )


34. மேடையில் உள்ள காட்சிகள் முழுவதுமாக தெரியச்செய்யும் வகையில் பிரயோகிக்கப்படும் ஒளி.
1) பெருக்கொளி 2) கீற்றொளி 3) பொட்டொளி
4) வர்ண ஒளி 5) அசையும் பொட்டொளி ( )

35. கட்டையான ஒரு நடிகர் தன்னை உயரமானவர் போல் அரங்கில் காட்டிக் கொள்ள வேண்டுமாயின் அவர் அணிய வேண்டியது?
1) குறுக்குக் கோடுகள் கொண்ட ஆடை 2) சதுரப்பெட்டிகள் கொண்ட ஆடை
3) தனிவர்ணமுள்ள ஆடை 4) மினுங்கும் தன்மையான ஆடை
5) நேர்கோடுகள் கொண்ட ஆடை ( )

36. நாடகப் பட்டறைகளில் 'கிப்பறிச்' பயிற்சி தொடர்புபடுவது?
1) உடற் பயிற்சியில் 2) தளர்வுப்பயிற்சியில் 3) குரல் பயிற்சியில்
4) அசைவாக்க பயிற்சியில் 5) உணர்வுசார் பயிற்சியில் ( )

37. சிறுவர் நாடகம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்று?
1) சிறுவரின் உள அனுபவத்துக்குட்பட்டதாக இருக்கும்
2) பார்போராக சிறுவர்கள் மட்டுமே காணப்படுவர்
3) சிறியவர்களும், பெரியவர்களும் நடிகர்களாக இருக்கலாம்
4) ஆடல் பாடல் விளையாட்டு என்பன காணப்படும்
5) அதிக செம்மைத்தன்மை இந்நாடகங்களுக்கு அவசியமில்லை ( )

38. அருகிலுள்ள படத்தில் காணப்படும் சிங்கள நாடக ஆசிரியர்
1) சரச்சந்திரா
2) தயானந்த குணவர்த்தனா
3) தம்மயா கொட
4) ஹென்றி ஜெசேனா
5) பராக்கிரம நிரியல



( )

agaram.lk

39. அருகிலுள்ள 'வேடமுகம்' பயன்படுத்தப்பட்ட அரங்கப் பாரம்பரியம்
1) கிரேக்க நாடகம்
2) உரோமைய நாடகம்.
3) சீன நாடகம்
4) சிங்கள நாடகம்
5) கபுக்கி நாடகம்



( )

40. இப் படத்தில் காணப்படும் காட்சிக்கான நாடகம்
1) அன்னை இட்ட தீ
2) இடிப்பஸ் மன்னன்
3) லியர் மன்னன்
4) எந்தையும் தாயும்
5) யூலியசீசர்



( )

(1 x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B பகுதியில் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களிற்கு மட்டும் விடை எழுதுக.**

### பிரிவு A

*01.*

I. "இடிப்பஸ் மன்னன்" அல்லது 'லியர் மன்னன்' நாடகபாடத்தில் வருகின்ற கதையின் திருப்பு முனையாக அமைந்த நாடகச் செயல்கள் இரண்டினை விபரிக்குக? *(6 புள்ளிகள்)*

II. அச் செயல்கள் (1) அவல முடிவினை நோக்கி நாடகத்தினை நகர்த்திய விதத்தினை ஆராய்க? *(9 புள்ளிகள்)*

*02.* கோடை, இராவணேசன் ஆகிய இரண்டு நாடக பாடங்களையும் பின்வரும் விடயங்களினூடாக ஒப்பீடு செய்க?

I. நாடகத்தின் கதைக்கரு

II. முரண்

III. சம்பவங்களின் வளர்ச்சிப் படிமுறை

*03.* ஐரோப்பிய அரங்க வரலாற்றில் பின்வரும் கொள்நெறிகள் உருவாகியமைக்கான சூழ்நிலைகளையும் அக் கொள்நெறிகளின் அடிப்படையான பண்புகளையும் விபரிக்குக?

I. யதார்த்த வாத அரங்கு

II. யதார்த்த விரோத அரங்கு

III. நவவேட்கை வாத அரங்கு *(15 புள்ளிகள்)*

agaram.lk

### பிரிவு B

*04.*

I. 'கூத்து' என்ற கலைவடிவத்தினை அடையாளப்படுத்தும் அதன் கூறுகளை முன்வைத்து விபரிக்குக? *(06 புள்ளிகள்)*

II. பாரம்பரிய கூத்து வடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஈழத்து தமிழ் அரங்கில் மேற்கொள்ளப்பட்ட நவீன முயற்சிகளை விபரிக்குக? *(09 புள்ளிகள்)*

*05.* ஈழத்து தமிழ் அரங்க வளர்ச்சியில் பங்களிப்பு நல்கிய மூன்று அரங்க நிறுவனங்களை இனங்கண்டு அவை ஆற்றிய பங்களிப்பினை முன்வைக்குக? *(15 புள்ளிகள்)*

*06.* பின்வரும் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக?

1. கிரேக்க 'கொமடி' நாடகம்
2. மத்திய கால 'அற்புத' நாடகம்
3. தமிழக 'தெருக்கூத்து'
4. சிங்கள 'கோலம்' நாடகம்
5. இசை நாடகம்
6. நாட்டை (3x5=15 புள்ளிகள்)